**தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் முதலாவது முன் கூட்டிய மதிப்பீட்டின் படி, 2021 -22 ஆண்டில், தேங்காய் 22.29 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 136.51 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் சேர்ந்து நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தியில் 91 சதவீதம் பங்களிக்கின்றன. தமிழ்நாட்டில், 2021-22 ஆம் ஆண்டில் 4.44 இலட்சம் எக்டர் பரப்பளவில் தேங்காயானது பயிரிடப்பட்டு 37.51 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

வர்த்தக மூலகங்களின் படி, பருவ மழை நன்றாக பெய்ததால், சந்தைக்கு வரும் அதிக வரத்துக் காரணமாக விலைகள் சரிந்துள்ளது. தற்போது, கொப்பரை வரத்தானது தாராபுரம், பல்லடம், சேலம், திண்டுக்கல், தேனி, ஈரோடு, மற்றும் பழநி ஆகிய இடங்களிருந்து பெருந்துறை சந்தைக்கு வருகிறது. மேலும், கர்நாடக, மாநிலத்திலிருந்தும் மே மாதம் 2022 -லிருந்து வந்து கொண்டு இருக்கிறது. குறைந்த தேவை, குறைவான உள்ளூர் நுகர்வு மற்றும் மலிவான சமையல் எண்ணெய்கள் இறக்குமதி போன்ற காரணங்களால் தேங்காய் எண்ணெய் விலையில் ஏற்றம் காணப்படவில்லை.

விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்காக, விலை ஆதரவு திட்டத்தின் கீழ் , மாநில அரசு கொப்பரையை இந்தியாவின் தேசிய விவசாய கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (NAFED) மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்கிறது. பொள்ளாச்சி, கிணத்துக்கிடவு,

ஆனைமலை, நெகமம், செஞ்சேரி, மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் கொப்பரைக்கான கொள்முதல் பிப்ரவரி முதல் தொடங்கியுள்ளது. இக்கொள்முதல் ஜுலை 31 வரை நீடிக்கும் என கூறப்பட்டுள்ளது.

விலை முன்னறிவிப்பு குழு, கடந்த 20ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரை விலையினை ஆய்வு செய்தது. மேலும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு விற்பனை மையத்தில் சந்தை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டது .ஆய்வு முடிவின் அடிப்படையில் ஜீலை – செப்டம்பர், 2022 வரை தரமான தேங்காயின் பண்ணைவிலை ரூ.10 முதல் ரூ 12 வரை இருக்கும் மற்றும் நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ.80 முதல் ரூ85 வரை இருக்கும் என கணித்துள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப் படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்*
*தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி -0422-2431405*

*இயக்குனர் மற்றும் முனை அதிகாரி*
*தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்*
*நீர் நுட்ப மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி -0422-6611278*

**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*வாசனைமற்றும் மலைத்தோட்டபயிர்கள்துறை*
*தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003.*
*தொலைபேசிஎண் -0422-6611284*

**Price Forecast for Coconut and Copra**

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for coconut and copra.

According to the First Advance Estimates of National Horticultural Board (2021-22), in India the area under coconut is 22.29 lakh hectares with a production of 136.51 lakh tonnes of nuts. Karnataka, Tamil Nadu, Kerala, and Andhra Pradesh together contribute nearly 91 percent of the total coconut production of the country. Tamil Nadu ranked second in position with 27 per cent of coconut production and has produced 37.51 lakh tonnes of coconuts from the cultivable area of 4.44 lakh hectares in 2021-22. Coimbatore, Tiruppur, Thanjavur, Dindigul and Kanyakumari districts contribute to major production.

According to trade sources, decline in prices is due to over- supply in the market in the recent period due to favourable weather conditions. At present, arrivals of copra are coming to Perundurai market from Dharapuram, Palladam, Salem, Dindigal, Erode and Palani. Also, arrivals from Karnataka have commenced from May, 2022 and will continue till September, 2022. There is no increase in coconut oil price during recent periods mainly due to low demand, reduction in local consumption, and reduced movement of upcountry markets besides import of cheaper edible oils.

Under the Price Support Scheme, the State government is procuring copra through The National Agricultural Cooperative Marketing Federation of India (NAFED) at MSP to help the farmers to realize better prices. Procurement has already initiated from February in the places of Negamam, Senjeri, Pollachi,

Kinathukadavu, Anaimalai, Mannargudi and Thiruthuraipoondi for copra and will continue till the end of July 31.

The price forecasting team has analyzed the past 20 years prices for coconut and copra that prevailed at Avalpoonthurai Regulated Market of Erode district and Perundurai Cooperative Marketing Society. As per the results of the analysis, the farmgate price of good quality coconut during July -September, 2022 will be Rs. 10-12 per nut. Price of good quality copra will rule around Rs. 80-85 per kg. The price may subject to change based on the arrivals from other states. Hence, farmers are advised to take selling decision accordingly.

***For Marketing information details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact:***

*Professor and Head*
*Department of Spices & Plantation Crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611284*